# மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், சங்ககிரி
# அசல் வழக்கு எண்.396/2009

பெயர் : செல்வராஜ் நாள் : 18.04.2022

வா.சா.1 – 1, 2 பிரதிவாதிகள் தரப்பு குறுக்கு விசாரணை.

வா.சா.1 – செல்வராஜ் - சத்திய பிரமாணத்தின் பேரில் குறுக்கு விசாரணை செய்யப்படுகிறார்.

முதலாம் வாதி செங்கோடன் உங்கள் சகோதரர் என்றால், சரிதான். நான் 2 ஆம் வாதி என்றால், சரிதான். நாங்கள் இருவரும் சேர்ந்துதான் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம் என்றால், சரிதான். 1 ஆம் வாதி இந்த வழக்கு நிலுவையில் இருக்கும்போது இறந்துவிட்டார் என்றால், சரிதான். 1 ஆம் வாதிக்கு அம்மாசி என்று ஒரு மனைவி உள்ளார் என்றால், இல்லை. அவரை இந்த வழக்கில் ஒரு தரப்பினராக சேர்க்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. 1 ஆம் வாதிக்கு அம்மாசி என்ற மனைவி உள்ளார் என்றாலும், அவரை இந்த வழக்கில் சேர்க்காத காரணத்தினால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து ஆதியில் முனியப்பன் என்பவருக்குத்தான் சொந்தம் என்றால், சரிதான். 1 ஆம் பிரதிவாதியிடமிருந்து தான் நானும், எனது சகோதரரும் சொத்து வாங்கியுள்ளோம் என்று சொன்னால், சரிதான். அந்த சொத்து வா.சா.ஆ.1, 2 ஆவணத்தின்படி வாங்கப்பட்டது என்று சொன்னால், சரிதான். 3 ஆம் பிரதிவாதி 1 ஆம் பிரதிவாதியின் பேரன் என்று சொன்னால், சரிதான். நாங்கள் நிலம் வாங்கியிருக்கும்போது 1, 3 பிரதிவாதியிடமிருந்து 2 ஆம் பிரதிவாதி வழக்கு சர்வே எண்ணில் கிரையம் பெற்றுள்ளார் என்று சொன்னால், முனியப்பன் என்பவரிடமிருந்துதான் கிரையம் பெற்றுள்ளார். 3 ஆம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெறவில்லை. வழக்கு சர்வே எண்ணின் 2 ஆம் பிரதிவாதி வாங்கிய கிரையம் செல்லாது என்பதுதான் எனது வழக்கு என்றால், சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தை செல்லாதது என்று கோரியுள்ளேன் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.5 ஆவணத்தில் மூன்றாம் பிரதிவாதியும் ஒரு தரப்பினர் என்று சொன்னால், தவறு. மூன்றாம் பிரதிவாதியை இந்த வழக்கில் எதற்காக சேர்த்துள்ளீர்கள் என்றால், 1 ஆம் பிரதிவாதியின் பேரன் 3 ஆம் பிரதிவாதி என்பதால், அவர் வழக்கு சொத்திற்கு இடையூறு செய்யக்கூடாது என்பதற்காக அவரை ஒரு தரப்பினராக சேர்த்துள்ளேன். நான் வழக்குரை மற்றும் முதல் விசாரணையில் கூறியுள்ள

விபரங்களுக்கு மாறாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. நானும், எனது சகோதரரும் புள்ளாக்கவுண்டம்பட்டி கிராம சர்வே எண்.138/16 என்ற எண்ணில்தான் முதலாம் பிரதிவாதியிடமிருந்து கிரையம் பெற்றுள்ளோம் என்று சொன்னால், சரிதான். இந்த நிலத்தின் மொத்த விஸ்தீரணம் 13-1/2 செண்ட் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.1 ஆவணத்தின்படி 1989 ஆம் ஆண்டு கிணற்றில் 4 இல் 1 பாகமும், 6**HP** ஆயில் என்ஜினில் 4 இல் 1 பாகமும் கிரையம் பெற்றுள்ளோம் என்று சொன்னால், சரிதான். இதை தவிர வேறு ஏதேனும் வாங்கியுள்ளீர்களா என்றால், இல்லை. 14.02.1994 இல் வா.சா.ஆ.2 ஆவணத்தின்படி சர்வே எண்.138/16 இல் 6 செண்ட் நிலம் கிரையம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால், 6 செண்ட் நிலமாகவும், 3 செண்ட் கிணறாகவும் வாங்கியுள்ளேன். நான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் கிணற்றில் 5 இல் 4 பாகம் மட்டுமே வாங்கியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள வாசகங்கள் சரிதான். வழக்கு சர்வே எண்138/16 இல் முழு நிலத்தையும் வாங்கவில்லை என்று சொன்னால், 9-1/2 செண்ட்நிலம் மட்டும் வாங்கியுள்ளேன். நான் நிலமாக வாங்கியுள்ளது 6 செண்ட் தான் என்று சொன்னால், சரிதான். வா.சா.ஆ.2 ஆவணபடி 3 செண்ட் கிணறு முழுவதையும் நான் வாங்கவில்லை என்று சொன்னாலும், 5 இல் 4 பங்கு மட்டுமே வாங்கியுள்ளேன் என்று சொன்னாலும், முழுவதையும்தான் வாங்கியுள்ளேன். 1 ஆம் பிரதிவாதிக்கு எனக்கு விற்பனை செய்த நிலம் தவிர வேறு நிலம் உள்ளது என்று சொன்னால், சரிதான். அந்த நிலம் கிணறு பாகத்திற்கு தென்புறமாக உள்ளது என்று சொன்னால், சரிதான். 6 செண்ட் நிலம் கிணறு பாகத்திற்கு வடக்கில் உள்ளது என்றால், சரிதான். தாவாசொத்திற்கு நேர்கிழக்காக பஞ்சாயத்து ரோடு செல்கிறது என்றால், சரிதான். வழக்கு சொத்திற்கு மேற்குபுறத்தில் எங்களின் மற்ற பூமிகள் உள்ளது என்று சொன்னால், சரிதான். முனியப்பன் அவருடைய நிலத்திற்கு கிணற்றிலிருந்து தண்ணீர் எடுக்கிறார் என்று சொன்னால், இல்லை. நான் சாட்சியத்தில் கூறுவதுபோல் 1 ஆம் பிரதிவாதி கிணறு முழுவதையும் கிரையம் செய்து கொடுக்கவில்லை என்று சொன்னால், சரியல்ல. தடமாக கிணற்றிற்கு தெற்கு பக்கம் 1/2 செண்ட் நிலம் வாங்கியுள்ளேன். கிணறு தாவா சர்வேஎண்ணின் தென்புறத்தில் உள்ளது என்று சொன்னால், சரிதான். அந்த கிணற்றை ஒட்டி தென்புறமாக உள்ள நிலம் வேறு சர்வே எண் சம்மந்தப்பட்டது என்று சொன்னால், சரிதான். கிணற்றிற்கு தென்புறத்தில் தடமே இல்லாதபோது 1/2 செண்ட் தடம் என்று குறிப்பிட்டு நிலம் வாங்கியது செல்லத்தக்கதல்ல என்று சொன்னால், சரியல்ல. கிணறு 3

சென்ட் பரப்பில் இல்லை என்று சொன்னால், உத்தி வாய்க்கால் அனைத்தும் சேர்த்துதான் 3 சென்ட்டில் கிணறு உள்ளது. நான் சொல்லக்கூடிய 3 சென்ட்டைக்கூட முழுவதும் நான் வாங்கவில்லை என்று சொன்னாலும், 5 இல் 4 பங்கு மட்டுமே கிரையம் வாங்கியுள்ளேன் என்று சொன்னால், முழுவதையும் வாங்கிவிட்டேன். நான் வா.சா.ஆ.2 ஆவணத்தில் உள்ள வாசகங்களுக்கு விரோதமாக சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி என்ன எதிர்வழக்குரை தாக்கல் செய்துள்ளார் என்ற விபரம் உங்களுக்குத் தெரியுமா என்றால், தெரியாது. 1 ஆம் பிரதிவாதி முனியப்பன் என்ன எதிர்வாதம் செய்துள்ளார் என்ற விபரம் தெரியாமலேதான் நான் சாட்சியம் அளிக்கிறேன் என்று சொன்னால், சரியல்ல. 1 ஆம் பிரதிவாதி கிணற்றிற்கு தென்புறமாக எந்த வழித்தடமும் இல்லை என்றும், 3 சென்ட் பரப்பில் கிணறு இல்லை என்றும் எதிர்வாதம் செய்துள்ள நிலையில் அது தவறு என்று நிரூபிப்பதற்காக நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனு ஏதேனும் தாக்கல் செய்துள்ளீர்களா என்றால், இல்லை. வழக்கு சொத்தை நீதிமன்ற ஆணையர் பார்வையிட்டால் உண்மை தெரிந்துவிடும் என்பதாலேயே நீதிமன்ற ஆணையரை நியமனம் செய்ய மனு தாக்கல் செய்யவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்குரையில் குறிப்பிட்டுள்ள சொத்து விபரம் சரியாக இல்லை என்று சொன்னால், சரியல்ல. ஆவணத்தில் உள்ளபடி வழக்கு சொத்து விபரத்தை கூறவில்லை என்று சொன்னால், சரியல்ல. வழக்கு சொத்து விபரம் பத்திரப்படி சரியானதா அல்லது வழக்குரையின்படி சரியானதா என்று சொன்னால், பத்திரப்படிதான் சரியானது. 1 ஆம் பிரதிவாதிக்கும், எனது சகோதரர் இறந்துபோன 1 ஆம் வாதி செங்கோடனுக்கும் இடையே இதே நீதிமன்றத்தில் ஒரு Pronote வழக்கு நடந்தது என்று கூறியுள்ளேன் என்றால், சரிதான். அது எவ்வளவு தொகைக்கான வழக்கு என்றால், ரூபாய் 40,000/-க்கான வழக்கு ஆகும். அந்த வழக்கு யாருக்கு சாதகமாக தீர்ப்பானது என்று சொன்னால், எனது அண்ணன் இறந்துபோன 1 ஆம் வாதிக்கு சாதகமாக தீர்ப்பானது. அந்த வழக்கு முழுவிசாரணைக்கு பின்புதான் தீர்ப்பானது என்று சொன்னால், சரிதான். அந்த விரோதத்தால்தான் முனியப்பன் என்பவர் 2 ஆம் பிரதிவாதிக்கு கிரையம் செய்து கொடுத்துவிட்டார் என்று சம்மந்தமில்லாத ஒன்றை கூறியுள்ளேன் என்று சொன்னால், சரியல்ல. 2 ஆம் பிரதிவாதியின் அனுபவத்தில் எவ்வளவு நிலம் உள்ளது என்றால், எனக்குத் தெரியாது. 2 ஆம் பிரதிவாதி வழக்கு சொத்து உள்ள இடத்திற்கு வருகிறாரா என்றால், எப்போதும் வந்தது இல்லை. இந்த நிலையில் 2 ஆம் பிரதிவாதி வழக்கு

சொத்தின் அனுபவத்தில் இடைஞ்சல் செய்தார் என்பது பொய் என்று சொன்னால், கிரயம் செய்தது தவறு என்றுதான் வழக்கு தாக்கல் செய்துள்ளேன். வழக்கு சொத்து உங்களுக்கு சொந்தமானது என்று விளம்புகை பரிகாரம் கேட்டுள்ளீர்களா என்றால், சரிதான், அதனால் இந்த வழக்கு நிலைக்கத்தக்கத்தல்ல என்று சொன்னால், சரியல்ல. நான் 6 செண்ட் நிலம் மட்டும் கிரையம் பெற்றுள்ளதால், மீதமுள்ள நிலத்தை முனியப்பன் கிரயம் செய்து கொடுப்பதற்கு உரிமை உள்ளது என்று சொன்னால், தவறு. முனியப்பனுக்கு உரிமை உள்ளது என்றாலும், அதனால் 2 ஆம் பிரதிவாதி வாங்கிய கிரையம் செல்லும் என்றாலும், சரியல்ல. பொய்யான சங்கதிகளை கூறி இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளதால், இந்த வழக்கை தள்ளுபடி செய்யக்கூடிய ஒன்று என்று சொன்னால், சரியல்ல.

ஒப்பம் / செல்வராஜ்

ஒப்பம் / திரு.ஆர்.ராதாகிருஷ்ணன்,
மாவட்ட உரிமையியல் நீதிபதி,
சங்ககிரி.